**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்.**
**முன்னிலை: திரு.இரா.வேலரஸ், பி.எஸ்.சி., பி.எல்., எல்.எல்.எம்.,**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண்.51/2014**
(CNR. No.TNSA01–000097–2014)

1. உஷாராணி, வயது சுமார் 48,
க/பெ. வி. ஞானவேல், வசிக்குமிடம்
கதவு எண்.227, எம்ரால்டு கார்டன், நரசோதிப்பட்டி,
சேலம்–4.

2. கே.சாந்தி, வயது சுமார் 45,
க/பெ. கிருஷ்ணமூர்த்தி, வசிக்குமிடம்
கதவு எண்.311, எம்ரால்டு கார்டன், நரசோதிப்பட்டி,
சேலம்–4.

3. சந்தோஷ்குமார், வயது சுமார் 24,
த/பெ. சி. மணி, வசிக்குமிடம்
கதவு எண்.313, பெரியான் வட்டம், அழகாபுரம் புதூர்,
சேலம்–16. .... வாதிகள்

/எதிராக/

1. பி. ஜாகீர் உசேன், வயது சுமார் 46,
த/பெ. பியாரோஜகான், வசிக்குமிடம்
கதவு எண்.1/356–ஏ, ஏ–பாத்திமா நகர்,
சன்னியாசிகுண்டு, சேலம்–636 015.

2. எம். ராமசாமி, வயது சுமார் 55,
த/பெ. வி.கே. முத்துசாமி, வசிக்குமிடம்
கதவு எண்.1/184, நத்தக்காடு,
ஜாரிகொண்டலாம்பட்டி கிராமம், சேலம்–10. ..... பிரதிவாதிகள்

| | | | |
|---|---|---|---|
| தாவா தாக்கல் செய்த நாள் | 20.02.2014 | தாவா சொத்தின் மதிப்பு | ரூ.15,50,000.00 |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | 20.12.2010, 27.02.2011, 06.03.2011, 30.11.2011, 08.08.2012, 08.09.2012, 29.10.2012 மற்றும் 31.08.2013 | செலுத்தப்பட வேண்டிய முத்திரைக்கட்டணம் | ரூ. 1,16,250.00 |
| | | செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் | ரூ. 1,16,250.00 |

1–ம் பிரதிவாதி வாதிகளுக்கு தாவா தொகையான ரூ.15,50,000/–த்தையும் மேற்படி தொகைக்கு தாவா தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை வசூலாகும்

நாள்வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டியும் சேர்த்து வாதிகளுக்கு 1–ம் பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும், தொகை வசூலாகும் காலம்வரை தாவா சொத்தின்மீது பற்றுகை ஏற்படுத்த கோரியும், தாவா செலவுதொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 24.02.2026–ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ராஜசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுரேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு நிலுவையில் இருந்தபோது 2–ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் மேற்படி 2–ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் வாதிகளால் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை விட்டுகொடுத்து விட்டதாக கடந்த 13.10.2022– அன்று வாதிகள் தரப்பில் குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டும், அவரை பொறுத்து வாதிகளால் கோரப்படும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் :–

**<u>தீர்ப்பாணை</u>**

| | |
|---|---|
| (i) | வாதிகள் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரத்தை விட்டு கொடுப்பதாக கடந்த 13.10.2022–அன்று குறிப்பு தாக்கல் செய்த காரணத்தினால் அவருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது ; |
| (ii) | 1–ம் பிரதிவாதிக்கு எதிராக வாதிகளால் கோரப்படும் பணப்பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என இவ்வழக்கினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது ; |
| (iii) | வாதிகளின் இவ்வழக்கு Vexatious Claim – கொண்டது என்ற காரணத்தினால் 1–ம் பிரதிவாதிக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 35(A) –இன் படிக்கு ரூ.3000/–ஐ Exemplary Cost– ஆக வாதிகள் செலுத்த வேண்டுமென்றும் ; |
| (iv) | வாதிகள் இந்த வழக்கின் செலவுத் தொகை ரூ.13,635–00 1ம் பிரதிவாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. |

<u>செலவு பட்டியல்</u>

| | வாதிகள் | 1–ம் பிரதிவாதி |
|---|---|---|
| தாவா மீதான முத்திரைக்கட்டணம் | -- | -- |
| வக்காலத்து மீதான முத்திரைக்கட்டணம் | -- | 10–00 |
| ஆவணங்கள்மீதான முத்திரைக்கட்டணம் | -- | 35–00 |
| சீனியர் வழக்கறிஞர் கட்டணம் | செலவு பட்டியல் தாக்கல் இல்லை | 10,000–00 |
| ஜுனியர் வழக்கறிஞர் கட்டணம் | -- | -- |
| மனுமீதான முத்திரைக்கட்டணம் | -- | 100–00 |
| நகல் செலவு | -- | 90–00 |
| வழக்கறிஞர் அறிவிப்பு | -- | 200–00 |
| எழுத்துக்கூலி | -- | 200–00 |
| கோர்ட்டாரால் உத்திரவான செலவு | -- | 3,000–00 |
| மொத்தம் | -- | 13,635–00 |

<u>SCHEDULE OF PROPERTY</u>

சேலம் மேற்கு ரிடி, சூரமங்கலம் சப்ரிடி, சேலம் மாநகரம், சிவதாபுரம் கிராமம், சர்வே நெம்பர்.151/1, பு.ஹெக்.2.02.0–க்கு தீ.ரூ. 15.60 இதில் பு.ஏ.1.00–க்கு தீஇ.ரு.3.12. இந்த தீர்வை பெற்ற நிலம் பூராவும் இதற்கு செக்குபந்தி விபரம்:–

சியாம்சக்ரவர்த்தி பாகத்திற்கும் தெற்கு. சீரங்கன் நிலத்திற்கும் வடக்கு. தென்வடல் பாதைக்கும் கிழக்கு. ரயில்வே நிலத்திற்கும் மேற்கு. இதன் மத்தியில் உள்ள மேற்படி புஞ்சை ஏக்கர் 1.00 விவசாய நிலம் பூராவும். மேற்படி நிலத்திற்கு மேற்குபுரமுள்ள தென்வடல் வண்டிப் பாதையின் வழியாகவும், அதை அனுசரித்துப்போகும் சகல பாதைகளின் வழியாகவும் ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனாதிகள், அனுபவப்படியும் கண்டுள்ள சகல ரைட்டுகளும், மற்றுமுள்ள சகல சுதந்திரங்களும் ஈஸ்மெண்ட் பாத்தியங்களும் சகிதமும் சேர்ந்து பூராவும் இதற்கு சம்மந்தப்பட்டது. மேற்படி நிலம் சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்./இரா.வேலரஸ்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

தீர்ப்பாணையின் உண்மை நகல்

I.A.D.J. Court, Salem
O.S.No.51/2014
Decree with V.Slip.
Dt.10-03-2026

Particulars of immovable property

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM**

**Original Suit No.51 of 2014**

1. Usharani
2. K. Santhi
3. Santhoshkumar .. Plaintiffs

/ vs. /

1. P. Jaheer Husain
2. M. Ramasamy .. Defendants

Valuation of immovable property for purposes of court fees

| Section Act | Nature of Suit | Annual Revenue | Market Value | Value for Purpose of Court Fees |
|---|---|---|---|---|
| 22 of TNCF Act | Recovery of amount | | | Rs. 15,50,000/- |
| | Court Fee paid U/S.22 of TNCF Act is | | | Rs. 1,16,250.50 |

Sd/. 1. Usharani
2. K. Santhi
3. Santhoshkumar
Plaintiffs

Sd/.R. Pradeepchandran
Counsel for Plaintiffs

// True Copy // By Order //

(Signed)
Head Clerk.